www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 12X1=12

1. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ---------
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

2. 'பாடறிந்து' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------
அ) பாட் + அறிந்து ஆ) பா + அறிந்து இ) பாடு + அறிந்து ஈ) பாட்டு + அறிந்து

3. 'செம்மரம்' – என்னும் சொல் --------- த்தொகை.
அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை

4. சான்றோர் எனப்படுபவர் -------- களில் சிறந்தவர் ஆவார். இத்தொடரைச் சரியான இணைச் சொற்கள் இட்டு நிரப்புக.
அ) மேடுபள்ளம் ஆ) ஈடுஇணை இ) கல்விகேள்வி ஈ) போற்றிப்புகழப்பட

5. காட்டிலிருந்து வந்த -------- கரும்பைத் தின்றன.
அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

6. அரசரை அவரது -------- காப்பாற்றும்.
அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை

7. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------
அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில் இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்று கட்டில்

8. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு -------- பெருகிற்று.
அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி

9. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் ---------
அ) பெருமழை ஆ) சிறுமழை
இ) எடைமிகுந்த மழை ஈ) எடைகுறைந்த மழை

10. 'ஆன்பெருநை' என்று அழைக்கப்படும் ஆறு --------
அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி

11. 'பாலாடை' இச்சொல்லுக்குரிய புணர்ச்சி --------
அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

12. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் --------
அ) திருப்பூர் ஆ) கரூர் இ) நாமக்கல் ஈ) சேலம்

பகுதி - II

பிரிவு–I

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5X2=10

13. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

14. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

15. இரவு பகல் என்பது எவ்வகைத் தொடர் என எழுதுக.

16. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?

17. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

18. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

19. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?

பிரிவு – II

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3X3=9

20. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?

21. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

22. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.

23. நமக்கு இருக்க வேண்டிய பண்புநலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

24. உழவுத் தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

பகுதி - III

IV. அடிமாறாமல் எழுதுக. 4+2=6

25. "ஆற்றுதல் என்பது......." எனத் தொடங்கி, ......... "தன்கிளை செறாஅமை" என முடியும் நல்லந்துவனார் பாடல்.

26. "இதனை" எனத் தொடங்கும் திருக்குறள்.

பகுதி – IV

V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 4x2=8

27. கைத்தொழில்களை வளர்க்க நம் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.

28. கலைச்சொல் எழுதுக.

அ) Loom = ------------ ஆ) Artisan = ---------

29. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக.

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாககரம், மகுடி.

30. அ) பின்வரும் மரபுத்தொடரைத் தொடரில் அமைந்து எழுதுக.

முதலைக் கண்ணீர்

ஆ) கோடிட்ட இடத்தைப் பொருத்தமான சொல்லுருபு இட்டு நிரப்புக.

தமிழைக் --------- (காட்டிலும் / நின்று) சுவையான மொழியுண்டோ?

பகுதி – V

VI. ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும். 1x5=5

31. இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

32. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

33. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், இத்தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com